2025 – ஆகஸ்ட் மாதம் 21– ஆம் தேதி வியாழக்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 207/2024*

*2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W2, இராமர் |
| தந்தையார் பெயர் | : | செல்வராஜ் |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | சட்ட அலுவலர் |
| வயது | : | 34 |

**தேதி: 21.08.2025.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சட்ட அலுவலர் ஆவேன். நான் 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.2** ஆக இருந்து எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின்வரும் ஆவணங்களை எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

1). 22.07.2023–ம் தேதி 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு வழங்கப்பட்ட காப்பீடு நகலை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 11.06.2025–ம் தேதி 1–ம் எதிர்மனுதாரருக்கு எங்கள் நிறுவன வழக்கறிஞர்மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் பதிவஞ்சல் இரசீதை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து 11.01.2024–ம் தேதி நடைபெற்றது. விபத்து சமயத்தில் 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். காப்பீட்டு நிபந்தனைகளின்படி மூன்றாம் தரப்பினரைப் பொறுத்து காப்பீடு நடைமுறையில் இருக்கும் என்றால் சரிதான். மனுதாரர் விபத்தைப் பொறுத்து மூன்றாம் தரப்பினர் என்று சொன்னால் சரிதான். விபத்தில் காயம்பட்ட மனுதாரர் மூன்றாம் தரப்பினர் என்பதால் எங்கள் நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

ஒப்பம்/– கி. முரளிதரக்கண்ணன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.